மோட்டார் வாகன விபத்து கோரிக்கை உரிமை தீர்ப்பாயம்/
முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை :– திருமதி. P. சுதா, B.Com., B.L.,
மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய நடுவர்
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 12 ஆம் நாள்
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள், வியாழக்கிழமை

**மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய அசல் மனு எண்.241/2018**

1. தனலெட்சுமி (வயது 53),
2. **கண்ணன், வயது 38, (இறந்துவிட்டார்),**
3. ரேவதி (வயது 33),
4. ரீட்டா (வயது 29),
5. மணிகண்டநாயகன் (வயது 28),
6. ரேணுகா (வயது 25),
7. **அனிதா (இறந்துவிட்டார்),**
8. **மைனர் மனிஸ்தா (இறந்துவிட்டார்)**
**(அவரின் தாயார் மற்றும் பாதுகாவலர் 7 ஆம் மனுதாரர் மூலமாக)** .... மனுதாரர்கள்

***(Amended as per I.A.No.3/2021, dt.22.03.2021 தேதியிட்ட உத்தரவுப்படி 1 ஆம் எதிர்மனுதாரர் துரைராஜ் மற்றும் 8 ஆம் மனுதாரர் மைனர் மணிஸ்தா இறந்துவிட்டதாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது)***

***(Amended as per I.A.No.6/2025, dt.07.02.2025 தேதியிட்ட உத்தரவுப்படி 2 ஆம் மனுதாரர் கண்ணன், 7 ஆம் மனுதாரர் அனிதா இறந்துவிட்டதாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது)***

***(Amended as per I.A.No.5/2024, dt.19.12.2024 தேதியிட்ட உத்தரவுப்படி 1 ஆம் எதிர்மனுதாரர் துரைராஜ் என்பவர் இறந்துவிட்டதால் அவரது மகன் எலின்ராஜ் என்பவரை 3 ஆம் எதிர்மனுதாரராக சேர்த்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது)***

**//எதிர்//**

1. துரைராஜ் (இறந்துவிட்டார்)
த.பெ. அந்தோணிசாமி,

2. கிளை மேலாளர்,
ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி,
மயிலாடுதுறை,

3. எலின்ராஜ், த.பெ.துரைராஜ், .... எதிர்மனுதாரர்கள்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:29:56 +0530

இம்மனு என் முன்பாக 07.03.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் திரு.P.அன்புரோஸ் அவர்கள் ஆஜராகியும், 1 ஆம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில் அவரது வாரிசான 3 ஆம் எதிர்மனுதாரரை மனுவில் சேர்த்து திருத்தம் செய்துள்ள நிலையில், 3 ஆம் எதிர்மனுதாரரும் தோன்றாத்தரப்பினர் நிலையில் வைக்கப்பட்டும், 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.R.சேயோன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் மற்றும் 2 ஆம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்றைய தினம் இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உ த்தரவு**

**01.** இம்மனு மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 166 ன் கீழ் மாசிலாமணி, வயது 60, த.பெ.அப்பாசாமி என்பவர் சாலை விபத்தில் மரணமடைந்ததற்காக ரூ.25,00,000/– (ரூபாய். இருபத்தைந்து இலட்சம் மட்டும்) இழப்பீடு கோரி அவரது வாரிசுகளான 1 முதல் 8 மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02. மனுவின் சுருக்கம் :–**

கடந்த 18.08.2018 ஆம் தேதி இரவு சுமார் 10.00 மணிக்கு மணல்மேடு கடைத்தெருவில் உள்ள அபி மெடிக்கலில் மருந்து வாங்கி கொண்டு எதிரில் ஓரமாக நின்று கொண்டு இருக்கும் போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 82 E 5196 என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து, மாசிலாமணி மீது மோதியதில் மாசிலாமணி மல்லாக்க விழுந்து தலை மற்றும் தோள்பட்டை எலும்பில் பல காயம் ஏற்பட்டு, மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, பின்பு மேல்சிகிச்சைக்காக 18.08.2018 ஆம் தேதி உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளித்தும் பலன் அளிக்காமல் 20.08.2018 ஆம் தேதி இறந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார்கள்.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:30:06 +0530

விபத்தில் இறந்துபோன மாசிலாமணிக்கு விபத்தின் போது 61 வயது என்றும், இவர் நல்ல உடல் வலிமையும், மனவலிமையும் கொண்டவர் என்றும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மின் கம்பியாளராக பணியாற்றி ஓய்வுபெற்ற பிறகு ஓய்வூதியமாக ரூ.15,000/- மும், மளிகை கடை வைத்து அதன் மூலம் ரூ.10,000/- வரையும் சம்பாதித்து அவரது மனைவி மற்றும் குழந்தைகளை காப்பாற்றி வந்ததாகவும், இவர் இறந்தபிறகு இவரின் குடும்பம் வருமானமில்லாமல் கஷ்டஜீவனம் செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்கள்.

மேற்படி விபத்து சம்மந்தமாக மணல்மேடு காவல்நிலைய குற்ற எண்.262/2018 என்ற நம்பரில் இதச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் TN 82 E 5196 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் ஓட்டுனர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, வாகனத்தின் ஓட்டுனர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான TN 82 E 5196 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது ஆகும். 1ஆம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார், மேற்படி வாகனம் 2ஆம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. 3ஆம் எதிர்மனுதாரர் 1ஆம் எதிர்மனுதாரரின் வாரிசு என்ற முறையில் மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள வருமான இாப்பு, அன்பு, பாசம், மருத்துவ செலவு, போக்குவரத்து செலவு, ஈமக்கிரியை செலவு, மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு, சொத்துரிமையை இழந்ததற்கு என எல்லாவற்றுக்கும் சேர்த்து ரூ.25,00,000/- (ரூபாய். இருபத்தைந்து இலட்சம் மட்டும்) நஷ்டயீடு கொடுக்க 1, 2 எதிர்மனுதாரர்கள் கடமைப்பட்டவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

<u>03. 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u> :-

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து லட்சம் மட்டும்) இழப்பீடு கோரும் மனு வழக்கின் உண்மைகள் அடிப்படையிலும், சட்டத்தின் கீழும் பராமரிக்கப்பட முடியாதது என்றும், தள்ளுபடி செய்யதக்கது என்றும்,

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:30:13 +0530

முதல் எதிர்மனுதாரர் வாகனமான TN 82 E 5196 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநரின் அலட்சியத்தால் விபத்து ஏற்படவில்லை, முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரால் விபத்து ஏற்பட்டது என்பதை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார் என்றும், மேலும் 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் மேற்படி வாகனம் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டாலும், அது எப்போதும் பாலிசியின் சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்றும், 2 ஆம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீட்டிற்கும் பொறுப்பேற்க முடியாது என்றும், விபத்து நடந்த நாளில் சாலையில் செல்லுபடியாகும் R.C., I.C., F.C. போன்றவற்றை முதல் எதிர்மனுதாரர் வைத்திருந்தார் என்பதையும், விபத்து நடந்த நேரத்தில் முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநரிடம் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், மேலும் உரிமம் இல்லாமல் ஒரு நபரை வாகனம் ஓட்ட அனுமதிப்பது கொள்கை மீறலாகும், அதனால் முதல் மனுதாரரே மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், இதுவரை வாகன உரிமையாளரிடமிருந்து எந்த கோரிக்கையையும் பெறவில்லை என்றும், காப்பீடு செய்யப்பட்டதாகக் கூறப்படும் நபர் முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அலட்சியமான செயலால் மட்டுமே விபத்து ஏற்பட்டது என்பதை நிரூபிக்க வேண்டும் என்றும், இறந்தவர் 70 வயதுக்கு மேற்பட்டவர், 60 வயது என்பது போன்ற மனுவின் கூற்று முற்றிலும் தவறானது, இறந்தவரின் வயதை நிரூபிக்க மனுதாரர்களால் எந்த ஆதாரமும் சமர்ப்பிக்கப் படவில்லை, இறந்தவரின் வயதை நிரூபிக்க மனுதாரர்கள் கடமைப்பட்டுள்ளனர், இறந்தவர் ஆரோக்கியமானவர் என்றும், இறந்தவர் TNEB ல் பணி செய்து ஓய்வு பெற்ற பின்னர் மளிகைக் கடை வைத்து மாதம் ரூ.25,000/- சம்பாதிப்பதாக மனுவில் கூறப்பட்டுள்ளது, அதனை நிரூபிக்க எந்த ஆவண ஆதாரமும் இல்லை, இறந்தவர் சாலையில் நின்று கொண்டிருந்தபோது மனுவில் கூறப்பட்டுள்ளபடி முதல் எதிர்மனுதாரரின் வாகனம் மோதியது என்பதை மறுப்பதாகவும், மேலும், விபத்து நடந்த உடன் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கும், திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் அனுப்பப்பட்டு, பின்னர் மேற்படி விபத்தில் ஏற்பட்ட காயங்களால் இறந்துவிட்டார் என்பதை மறுப்பதாகவும், இறந்தவர் விபத்துக்கு தானே பங்களித்ததாகவும், எனவே, பங்களிப்பு அலட்சியம் என்ற கோட்பாட்டின்

SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2026.03.26 19:30:21 +0530

அடிப்படையில், 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க பொறுப்பல்ல, இறந்தவரின் மரணத்திற்கு மனுதாரர்கள் எந்த இழப்பீடும் பெற உரிமை இல்லை, இறந்தவரின் மரணத்திற்கான காரணம் விபத்து அல்ல, பிரேத பரிசோதனை அறிக்கையின்படி மரணம் உடனடியானது அல்ல, விபத்து மரணத்திற்கான உடனடி காரணம் அல்ல, இறந்தவர் பல்வேறு உடல்நலக் கோளாறுகள் மற்றும் மருத்துவக் கோளாறுகளால் இறந்தார், மனுதாரர்கள் இறந்தவரின் சரியான வயதை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளனர். மனுதாரர்கள் இறந்தவரின் சார்புடையவர்கள் அல்ல, மனுதாரர்கள் வருமானம் கொண்ட வயது வந்த உறுப்பினர்கள், எனவே அவர்களை இறந்தவரின் சார்புடையவர்கள் என்று அழைக்க முடியாது, மனுதாரர்கள் தங்கள் கூற்றை உறுதிப்படுத்த சட்டப்பூர்வ வாரிசுச் சான்றிதழை சமர்ப்பிக்கவில்லை, மனுதாரர்கள் அந்தக் குற்றச்சாட்டுகளை முறையான வாய்மொழி மற்றும் ஆவண ஆதாரங்கள் மூலம் கண்டிப்பாக நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளனர், இறந்தவர் தனது உணவுக்காக மனுதாரர்களை நம்பியிருந்தார் என்றும், மனுதாரர்கள் இருபத்தைந்து லட்சம் கோரியுள்ளது மிகையானது, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி மனுதாரர்கள் வட்டி மூலம் 6% மட்டுமே கோர முடியும், எனவே, மனுவை செலவுகளுடன் தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>04. 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிருரையின் சுருக்கம்</u> :-

மனுவில் 1 ஆம் மனுதாரரும், அவரது தந்தையும் இறந்துவிட்டதாக கூறியுள்ள மனுதாரர் அதனை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார் என்றும், துரைராஜின் வாரிசுகளின் விவரங்களை சேர்த்து மனு தாக்கல் செய்யவில்லை, அவரது வாரிசுகளை அசல் வழக்கில் சேர்த்து நடத்தினால் தான் மனு நிலைநிற்க தக்கதாகும் என்றும், இறந்துபோன மாசிலாமணியின் 2 ஆம் மனைவியான அனிதா சட்டப்படி வாரிசு என்ற நிலையில் வரமாட்டார், எனவே மனுவை கூடுதல் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

05. 1 ஆம் எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினர் நிலையில் வைக்கப்பட்டுள்ளார். ***Amended as per I.A.No.5/2024, dt.19.12.2024 தேதியிட்ட உத்தரவுப்படி 1 ஆம்***

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:30:31 +0530

***எதிர்மனுதாரர் துரைராஜ் இறந்துவிட்டதால் அவரது மகன் எலின்ராஜ் என்பவரை 3 ஆம் எதிர்மனுதாரராக சேர்த்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது)***3 ஆம் எதிர்மனுதாரரும் தோன்றாத் தரப்பினர் நிலையில் வைக்கப்பட்டுள்ளார்.

**06. இந்த மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனைகள் :–**

1. இந்த விபத்து யாருடைய கவனக்குறைவின் காரணமாக ஏற்பட்டது?
2. மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் யார்?
3. மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?
4. மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரம் என்ன?

**07.** இம்மனு விசாரணையின் போது மனுவின் 1 ஆம் மனுதாரர் தனலெட்சுமி ம.சா.1 ஆகவும், விபத்தை நேரில் பார்த்த சாட்சிகளான மாரியப்பன் ம.சா.2 ஆகவும், ஆனந்தன் என்பவர் ம.சா.3 ஆகவும், மின்சார வாரிய அகநிலை தணிக்கை அலுவலர் ஹேமச்சந்திரன் ம.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். ம.சா.1 ன் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.4 ன் மூலம் சா.சா.ஆ.1 தாக்கல் செய்யப்பட்டு, குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக இளநிலை உதவியாளர் சின்னதாய்யம்மாள் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எ.ம.சா.1 ன் மூலம் சா.சா.ஆ.1(a) மற்றும் சா.சா.ஆ.2 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டது.

**08.** 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில், 1 ஆம் எதிர்மனுதாரருக்காக வாதம் செய்ய வேண்டி, தனியாக மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 170–ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**<u>09. பிரச்சனை எண்.1 :–</u>**

i) ம.சா.1 தனலெட்சுமி மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை ஒத்துரைத்தே சாட்சியம் அளித்து, அவரது தரப்பு சாட்சியத்திற்கு ஆதரவாக முதல் தகவலறிக்கை

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:30:39 +0530

நகல் ம.சா.ஆ.1, பிரேத பரிசோதனை அறிக்கை நகல் ம.சா.ஆ.2, இறப்பு சான்று நகல் ம.சா.ஆ.3, விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு சான்று நகல் ம.சா.ஆ.4, மேற்படி வாகனத்தின் காப்பீட்டு சான்று நகல் ம.சா.ஆ.5, வாரிசு சான்று கோரிய விண்ணப்பம் ம.சா.ஆ.6, 8 ஆம் மனுதாரர் இறந்ததற்கான இறப்பு சான்று நகல் ம.சா.ஆ.7, மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தகம் மற்றும் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.8 என ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்யப்பட்டு, குறியீடு செய்யப்பட்டுள்ளது. ***ம.சா.1 யை எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது அவரது கணவருக்கு விபத்தின் போது ம.சா.ஆ.2 ஆவணத்தின் படி 68 வயது என்றால் சரிதான்*** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

ii) ம.சா.2 மாரியப்பன் மற்றும் ம.சா.3 ஆனந்தன் இருவரும் சாட்சியத்தில் 18.08.2018 ஆம் தேதி இரவு சுமார் 10.00 மணிக்கு மணல்மேடு கடைத்தெருவில் அபி மெடிக்கல் அருகில் நின்று கொண்டிருந்தபோது மாசிலாமணி என்பவர் அபி மெடிக்கல் கடை எதிரில் ஓரமாக நின்று கொண்டிருந்தபோது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி TN 82 E 5196 என்ற இருசக்கர வாகன ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து நின்று கொண்டிருந்த மாசிலாமணி மீது மோதியதில் மாசிலாமணி நிலை தடுமாறி கீழே விழுந்ததில் தலை மற்றும் தோள்பட்டையில் பலத்த காயம் ஏற்பட்டு, மயிலாடுதுறை அரசு மருத்துவமணையில் முதல் உதவி சிகிச்சை அளித்து, பின் திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமணையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பலன் அளிக்காமல் 20.08.2018 ஆம் தேதி இறந்துவிட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். ம.சா.3 குறுக்கு விசாரணையில் அபி மெடிக்கல் கடைக்கு மேற்கே விபத்து நடந்தது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iii) சென்னை, தமிழ்நாடு மின்சார வாரிய அகநிலை தணிக்கை அலுவலர் ம.சா.4 அவரது சாட்சியத்தில் விபத்தில் இறந்த மாசிலாமணி மணல்மேடு மின்சார வாரியத்தில் மின் கம்பியாளராக பணியாற்றி 31.03.2015 ல் ஓய்வு பெற்று, ஓய்வு பெற்ற பின் ஓய்வூதியம் பெற்று வந்துள்ளார் என்றும், ***அவர் இறப்பதற்கு முன்பு ரூ.13,140/– ஓய்வு ஊதியமாக ஆகஸ்டு 2018 ல் வாங்கியுள்ளார் என்றும், அவர் இறந்தபிறகு அவரது***

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:30:47 +0530

***மனைவி தனலெட்சுமி ரூ.13,380/–குடும்ப ஓய்வு ஊதியமாக வாங்கி வருகிறார் என்றும், மாசிலாமணி மற்றும் மனைவிக்கு வழங்கப்பட்டு வந்த பென்சன் மற்றும் குடும்ப ஓய்வு ஊதியத்திற்கான ஆவணங்கள் சா.சா.ஆ.1 யை தாக்கல் செய்துள்ளார். ம.சா.4 ன் மூலம் சா.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. குறுக்கு விசாரணையில் அவர் இறக்கும் போது அவரது வயது 61 என்றும்,*** மாசிலாமணி உயிருடன் இருந்தால் அவர் பெறும் ஊதியத்தை அவரது மனைவி அதே ஓய்வு ஊதியத்தை தான் பெறுவதாக சாட்சியம் அளித்துள்ளார்.

iv) எதிர்மனுதாரர் தரப்பில் மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலக இளநிலை உதவியாளர் சின்னதாய்யம்மாள் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தில் அவருக்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அனுமதி கடிதம் சா.சா.ஆ.1(a) மற்றும் மணல்மேடு காவல் நிலைய குற்ற எண்.262–2018 சம்பந்தப்பட்ட TN 82 E 5196 இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் சா.சா.ஆ.2 யை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். வாகனத்தை இயக்கியவருக்கு விபத்து காலத்தில் ஓட்டுனர் உரிமம் இல்லை என்று சி.ஆர்.வழங்கப்பட்டுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார். எ.ம.சா.1 ன் மூலம் சா.சா.ஆ.1(a) மற்றும் சா.சா.ஆ.2 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது

v) மேற்படி ம.சா.1 முதல் ம.சா.4 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்தையும் மனுதாரர்கள் தரப்பில் முன்னிடப்பட்ட வாதுரைகளையும், சான்றாவணங்களையும் பரிசீலித்து பார்க்கும்போது கடந்த 18.08.2018 ஆம் தேதி இரவு சுமார் 10.00 மணிக்கு மணல்மேடு கடைத்தெருவில் உள்ள அபி மெடிக்கலில் மருந்து வாங்கி கொண்டு எதிரில் ஓரமாக நின்று கொண்டு இருக்கும் போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 82 E 5196 என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து, மாசிலாமணி மீது மோதியதில் மாசிலாமணி மல்லாக்க விழுந்து தலை மற்றும் தோள்பட்டை எலும்பில் பல காயம் ஏற்பட்டு, மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு முதல் உதவி

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:30:55 +0530

சிகிச்சை அளிக்கப்பட்டு, பின்பு மேல்சிகிச்சைக்காக 18.08.2018 ஆம் தேதி உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளித்தும் பலன் அளிக்காமல் 20.08.2018 ஆம் தேதி இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளார். மேலும் விபத்து ஏற்பட்டு மாசிலாமணி என்பவர் இறந்துவிட்டார் என்பது ம.சா.1 முதல் ம.சா.4 ஆகிய சாட்சிகளின் சாட்சியத்திலிருந்தும், ம.சா.ஆ.1 முதல்தகவல் அறிக்கையிலிருந்தும் தெளிவாக தெரியவருகிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

vi) விபத்து சம்பவம் குறித்து 2 ஆம் மனுதாரர் கண்ணன் மணல்மேடு காவல் நிலையத்தில் கொடுத்த புகார் வாக்குமூலத்தின்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுனரான எலின்ராஜ் என்பவர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது தெரியவருகிறது.

vii) மேற்படி ம.சா.1 முதல் ம.சா.3 ஆகிய சாட்சிகளின் சாட்சியத்திலிருந்தும் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையிலிருந்தும் பார்க்கும்போது விபத்து 1 ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் விபத்தின் போது அவரது வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்ததால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

viii) எனவே ம.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகளின் சாட்சியம், வாக்குமூலம் மற்றும் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது இம்மனுவில் கண்ட விபத்தானது முதல் எதிர்மனுதாரருக்குச் சொந்தமானதும், 2 ஆம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளதுமான TN 82 E 5196 என்ற பதிவெண் கொண்ட முதல் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான இருசக்கர வாகன ஓட்டுனர் எலின்ராஜ் என்பவர் விபத்தின் போது மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்ததால்தான் மேற்படி விபத்து ஏற்பட்டு, அந்த விபத்தின் காரணமாகத்தான் மாசிலாமணி என்பவருக்கு இறப்பு ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிய வருகிறது என்றே பிரச்சனை எண் 1–க்கு இந்த நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:31:04 +0530

**10. பிரச்சனை எண்.2 :–**

i) ஏற்கனவே பிரச்சனை எண்.1க்கு விபத்தானது 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 82 E 5196 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுனர் எலின்ராஜ் என்பவர் விபத்தின் போது மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்ததால்தான் இவ்வழக்கு விபத்து ஏற்பட்டுள்ளது என்று தீர்வு காணப்பட்டுள்ளது.

ii) 1ஆம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநர் விபத்து நேரத்தில் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமத்தை வைத்திருக்கவில்லை என்றும், சரிபார்ப்புக்கு உட்பட்டு கூறப்பட்ட 1ஆம் எதிர்மனுதாரரின் வாகனம் 2ஆம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்படவில்லை என்றும், 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் விபத்து நேரத்தில் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமத்தை வைத்திருந்தார் என்பதையும், 2ஆம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்பதையும் மனுதாரர்கள் நிருபிக்க வேண்டும் என்றும், மனுதாரர்கள் தாங்கள் சட்டப்பூர்வ வாரிசுகள் என்றும், இறந்தவரின் வருமானம் ஏதேனும் இருந்தால் அதை சார்ந்து இருப்பதையும் நிருபிக்க மனுதாரர்கள் கடமைப்பட்டுள்ளதாக எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதார் தரப்பில் 1ஆம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம், வாரிசு சான்று தாக்கல் செய்யப்படவில்லை, மேலும் 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சா.சா.ஆ.2 TN 82 E 5196 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் படி Without DL, CR issued என்று குறிப்பிடப்பட்டு உள்ளதிலிருந்து 1ஆம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு விபத்து காலத்தில் ஒட்டுனர் உரிமம் இல்லை என்பது புலனாகிறது. காப்பீட்டு நகல் ம.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே விபத்தின் போது விபத்தை ஏற்படுத்திய வாகனத்திற்க காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது புலனாகிறது. மேலும், ம.சா.ஆ.6 ஆவணமான வாரிசு சான்று கோரி விண்ணப்பம் செய்ததற்கான ஆவணம் ஆகும், மேற்படி ம.சா.ஆ.6 ஆவணத்தின் படி விபத்தில் இறந்த மசிலாமணிக்கு 1 மற்றும் 7 ஆம் மனுதாரர்கள் மனைவிகள் என்பதும், 2 மற்றும் 5 மனுதாரர்கள் மகன்கள், 3, 4, 6, 8 மனுதாரர்கள் மகள்கள் ஆவார்கள் என்பதும் புலனாகிறது.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:31:12 +0530

iii) 2 ஆம் எதிர்மனுதாரர் மனுவில் 1 ஆம் மனுதாரரும், அவரது தந்தையும் இறந்துவிட்டதாக கூறியுள்ள மனுதாரர் அதனை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார் என்றும், துரைராஜின் வாரிசுகளின் விவரங்களை சேர்த்து மனு தாக்கல் செய்யவில்லை என்றும், அவரது வாரிசுகளை அசல் வழக்கில் சேர்த்து நடத்தினால் தான் மனு நிலைநிற்க தக்கதாகும், இறந்துபோன மாசிலாமணியின் 2 ஆம் மனைவியான அனிதா சட்டப்படி வாரிசு என்ற நிலையில் வரமாட்டார், எனவே மனுவை கூடுதல் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என குறிப்பிட்டுள்ள நிலையில் Amended as per I.A.No.5/2024, dt.19.12.2024 தேதியிட்ட உத்தரவுப்படி 1 ஆம் எதிர்மனுதாரர் துரைராஜ் இறந்து விட்டதால் அவரது மகன் எலின்ராஜ் என்பவரை 3 ஆம் எதிர்மனுதாரராக சேர்த்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது, இறந்துபோனவரின் 2 ஆம் மனைவியான 7 ஆம் மனுதாரரும், அவரது மகள் 8 ஆம் மனுதாரரும் இறந்துவிட்டார்கள் என்பதும், முதல் மனுதாரரும், அவரது வாரிசுகளும் மட்டுமே தற்போது உயிருடன் உள்ளனர் என்பது மனு மற்றும் சாட்சியத்தின் மூலம் புலனாகிறது.

iv) ஏற்கனவே பிரச்சனை எண்.1 ல் தீர்மானிக்கப்பட்டபடி இந்த விபத்திற்கு 1 ஆம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை தான் காரணம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவுடன் தாக்கல் செய்திருக்கும் ம.சா.ஆ.1 முதல்தகவல் அறிக்கை ம.சா.ஆ.2 இறந்துபோன மாசிலாமணி என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை ஆகியவற்றை பார்க்கும்பொழுது மேற்படி விபத்தில் ஏற்பட்ட காயங்களால் தான் 1 மற்றும் 7 ஆம் மனுதாரர்களின் கணவரும், 2 முதல் 6, 8 மனுதாரர்களின் தகப்பனார் இறந்திருப்பது தெரியவருகிறது. மேற்படி சங்கதிகளை கருத்தில்கொண்டு பார்க்கும்பொழுது இவ்வழக்கு விபத்தில் இறந்த மாசிலாமணி என்பவர் இறப்பிற்கு 1 ஆம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்ட விபத்தில் அவருக்கு உண்டான காயங்கள் தான் காரணம் தீர்வு காணப்படுகிறது.

v) மேற்படி வாகனம் விபத்து காலத்தில் 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டு, அக்காப்பீடு நிலுவையிலிருந்துள்ளது என்பதை நிரூபிக்க

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:31:20 +0530

காப்பீட்டின் நகல் ம.சா.ஆ.5 ஆக மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.5 லிருந்து பார்க்கும்போது விபத்து வாகனம் விபத்து சமயத்தில் 2 ஆம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்பதும், அந்த காப்பீடு விபத்து சமயத்தில் செல்லத்தக்கதாக இருந்துள்ளது என்பதும் தெளிவாக தெரியவருகிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

vi) மேலும், ம.சா.ஆ.5 யை ஆய்வு செய்யும்போது முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்திற்கு 31.05.2018 முதல் 30.05.2019 வரை இன்சூரன்ஸ் நிலுவையில் இருந்துள்ளது என்பதும், இக்கால இடைவெளியில் தான் அதாவது 18.08.2018 ம் தேதி தான் மாசிலாமணி என்பவருக்கு விபத்து ஏற்பட்டுள்ளது என்பதும் தெளிவாக தெரியவருகிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

vii) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எ.ம.சா.ஆ.2 ஆவணமான 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின்படி விபத்து வாகனம் மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டபோது மேற்படி வாகனத்தின் உரிமையாளர் என்ற இடத்தில் முதல் எதிர்மனுதாரர் பெயரான துரைராஜ் என்பவரது பெயரும், விபத்தின் போது வாகனத்தை ஓட்டியவர் என்ற இடத்தில் எலின்ராஜ், த.பெ.துரைராஜ் என்று குறிப்பிட்டும், அவரது ஓட்டுநர் உரிமம் குறித்த வரிசை எண்.8 காலத்தில் With Out DL, CR Issued எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி முதல் எதிர்மனுதாரர் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாத நபரை தனது வாகனத்தை ஓட்ட அனுமதி அளித்து பாலிசி விதி மீறல் செய்துள்ளதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

viii) எனவே, <u>**2011 ACJ 926 (SC) Kusum Lata Vs.Satbir)**</u> என்ற தீர்ப்புரையில் சொல்லப்பட்டுள்ளவாறு மனுதாரருக்குரிய இழப்பீட்டுத் தொகையை 2 ஆம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் செலுத்திவிட்டு, பின்னர் வாகன உரிமையாளரான முதல் எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டுமென்று பிரச்சனை எண்.2 ற்க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>11. பிரச்சனை எண்.3 :–</u>**

i) இம்மனுவில் கண்ட மனுதாரர்கள் இறந்துவிட்ட மாசிலாமணி என்பவரின்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:31:43 +0530

சட்டப்படியான வாரிசுதாரர்கள் என்பதை நிரூபணம் செய்வதற்கு மனுதாரர்கள் தரப்பில் வாரிசுசான்று கோரி தாக்கல் செய்த விண்ணப்பம் ம.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மனு மற்றும் சாட்சியத்திலிருந்து 1 முதல் 8 மனுதாரர்கள் இறந்து போன மாசிலாமணி என்பவரின் வாரிசுகள் என்பது புலனாகிறது. மேற்படி ம.சா.ஆ.6 லிருந்து பார்க்கும்போது விபத்தில் இறந்த மாசிலாமணிக்கு 1 மற்றும் 7 ஆம் மனுதாரர் மனைவிகள் என்பதும், 2 மற்றும் 5 ஆம் மனுதாரர் மகன்கள் என்பதும், 3, 4, 6, 8 மனுதாரர்கள் மகள்கள் என்பதும் தெளிவாக தெரியவருகிறது என்றே நீதிமன்றம் கருதுகிறது. ***8 ஆம் மனுதாரர் மைனர் மணிஸ்தா 2 ஆம் மனுதாரர் கண்ணன், 7 ஆம் மனுதாரர் அனிதா இறந்துவிட்டதாக இறப்பு சான்று தாக்கல் செய்யப்பட்டு, அசல் மனுவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.***

ii) ம.சா.1 அவரது சாட்சியத்திலும், அவரது பிரமாண வாக்குமூலத்திலும் விபத்தில் இறந்த மாசிலாமணி என்பவருக்கு விபத்தின் போது 61 வயது என்றும், இவர் நல்ல உடல் வலிமையும், மனவலிமையும் கொண்டவர் என்றும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மின் கம்பியாளராக பணியாற்றி ஓய்வுபெற்ற பிறகு ஓய்வூதியமாக ரூ.15,000/- மும், மளிகை கடை வைத்து அதன் மூலம் ரூ.10,000/- வரையும் சம்பாதித்து அவரது மனைவி மற்றும் குழந்தைகளை காப்பாற்றி வந்ததாகவும், இவர் இறந்தபிறகு இவரின் குடும்பம் வருமானமில்லாமல் கஷ்டஜீவனம் செய்து வருவதாகவும் கூறியுள்ளார். இவ்வழக்கு விபத்தில் இறந்த மாசிலாமணி என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கையான ம.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலிக்கும் போது இறந்தவரின் வயது 68 என்றும், இறப்பு சான்றிதழான ம.சா.ஆ.3 ஆவணத்தில் இறந்தவரின் வயது 61 என்றும் குறிபிடப்பட்டுள்ளது. இருப்பினும் பிணகூறாய்வு அறிக்கையின் கூற்றே சரியானது என்றும், பிணகூறாய்வு அறிக்கையின் வயதையே கருத்தில் கொள்ளவேண்டும் என்ற முன்தீர்ப்புகளின் அடிப்படையிலும், பிணகூறாய்வு அறிக்கையில் உள்ளவாறு இறந்த மாசிலாமணி என்பவரின் வயது 68 என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

iii) ம.சா.1 தனது சாட்சியத்திலும், அவரது பிரமாண வாக்குமூலத்திலும் அவரது கணவர் விபத்து சமயத்தில் ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும், தமிழ்நாடு மின்சார

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:31:51 +0530

வாரியத்தில் மின் கம்பியாளராக பணியாற்றி ஓய்வுபெற்ற பிறகு ஓய்வூதியமாக ரூ.15,000/- மும், மளிகை கடை வைத்து அதன் மூலம் ரூ.10,000/- வரையும் சம்பாதித்து அவரது மனைவி மற்றும் குழந்தைகளை காப்பாற்றி வந்ததாகவும் கூறியுள்ளார். மேலும் மேற்படி விபத்தில் இறந்தவர் ஓய்வு ஊதியம் பெற்றார் என்பதற்கு ம.சா.4 ன் சாட்சியம் மூலம் சா.சா.ஆ.1 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, சா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் இறந்துபோன மாசிலாமணி என்பவர் கடைசியாக பெற்ற மாத ஓய்வு ஊதியம் ரூ.13,140/- என்பதும், அவர் இறந்த பிறகு அவரது மனைவி குடும்ப ஓய்வு ஊதியமாக ரூ.13,380/- பெற்றுள்ளார் என்பதும் மேற்படி ஆவணத்தின் மூலம் புலனாகிறது. எனவே, மேற்படி சா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் கடைசியாக அவரது மனைவி பெற்ற ஓய்வூ ஊதியமாக இறந்தவரின் மாத வருமானம் ரூ.13,380/- என்று நிர்ணயம் செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இத்தீர்ப்பாயம் கருதுகிறது.

**12.** National Insuranace Company Vs Pranay Sethi, dated:31.10.2017 என்ற முன்னோடி வழக்கில் சொல்லப்பட்டுள்ளபடி 60 வயதுக்கு உட்பட்ட நபர்களுக்கு மட்டுமே எதிர்கால வருமானத்தை கருத்தில்கொள்ள முடியும். ஏற்கனவே இவ்வழக்கில் இறந்துபோன மாசிலாமணி என்பவருக்கு 68 வயது என்று இந்த தீர்ப்பாயத்தால் முடிவு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் **அவருக்கு எதிர்கால வருமானம் பொருந்தாது என்று முடிவு செய்யப்படுகிறது.** **National Insurance company Limited Vs Pranay Sethi, Dated: 31.10.2017,** என்ற முன்னோடி தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நமது மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களின் அடிப்படையில் Multiplier-யை தேர்வு செய்ய வேண்டும். அதன்படி இறந்துபோன மாசிலாமணி என்பவரின் வயதான 68 க்குரிய பெருக்கல் குறியீடு 5 ஆகும். அவ்வகையில் இவ்விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்பீடு ரூ.13,380/- X 12 X 5 = ரூ.8,02,800/- ஆகும்.

**13.** **மாண்புமிகு உச்ச நீதிமன்றம் 2009(2) TN MAC 1 (SC)-Smt. Sarla Verma & Ors./Vs/ Delhi Transport Corporation & Anr.** என்ற வழக்கில் ஒரு இறந்த நபர் தனது சுயதேவைக்காக 5-ல் 1-பாகம் செலவழித்திருப்பார் என்று கருத்தில் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. எனவே ரூ.8,02,800/- ÷ 5 =

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:32:20 +0530

ரூ.1,60,560/- போக மீதமுள்ள 4/5 பாகமான ரூ.6,42,240/-இந்தத் தொகை வருமான இழப்புக்கான இழப்பீடாக மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதாகிறது.

**14**. மேலும், மேற்படி முன்னோடி தீர்ப்பில் கண்டுள்ளபடி Loss of Estate ற்காக ரூ.15,000/-, Loss of Consortium (பாச இழப்பிற்காக) ரூ.40,000/-, மற்றும் Funeral Expanses ற்காக ரூ.15,000/-, ஆக மொத்தம் ரூ.70,000/- மனுதாரர்களுக்கு மேற்படி தலைப்புகளின் கீழ் கிடைக்கக்கூடியது. ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கும் மேற்படி தீர்ப்புரையை பொருத்து 10 சதவிகிதம் தொகை அதிகப்படுத்திகொடுக்க வேண்டும். இந்நிலையில் மேற்படி தொகையை பொருத்து 10 சதவிகிதம் அதிகமாக அதாவது ரூ.7,000/-கூடுதலாக, ஆகமொத்தம் ரூ.77,000/- மனுதாரர்களுக்கு கிடைக்கக் கூடியது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**15. கீழ்கண்ட பட்டியலின் கீழ் இழப்பீட்டுத்தொகை கணக்கிடப்படுகிறது.**

| **வ. எண்.** | **தலைப்பு** | **இழப்பீட்டுத் தொகை** |
|---|---|---|
| 1. | **வருமான இழப்பு (Loss of Dependency)**<br>ரூ.13,380/- X 12 X 5 = ரூ.8,02,800/-<br>ரூ.8,02,800/- ÷ 1/5 = ரூ.1,60,560/- போக மீதமுள்ள 4/5 பாகமான ரூ.6,42,240/- | ரூ.6,42,240/- |
| 2. | **வசதி வாய்ப்பு இழப்பு (Loss of Estate )**<br>Rs.15,000/- + Rs.1,500 (10% in Rs.15,000/-) = Rs.16,500/- | ரூ.16,500/- |
| 3. | **பாச இழப்பு (Loss of Consortium)**<br>Rs.40,000/- + Rs.4,000 (10% in Rs.40,000/-) = Rs.44,000/- X 5 = ரூ.2,20,000/- | ரூ.2,20,000/- |
| 4. | **ஈமக்கிரியை செலவு (Funeral Expanses)**<br>Rs.15,000/- + Rs.1,500 (10% in Rs.15,000/-) = Rs.16,500/- | ரூ.16,500/- |
| | **மொத்தம்** | **8,95,240/-** |

**16.** ம.சா.ஆ.6 லிருந்து பார்க்கும்போது விபத்தில் இறந்த மாசிலாமணிக்கு 1 மற்றும் 7 ஆம் மனுதாரர்கள் மனைவிகள் என்பதும், 2 மற்றும் 5 ஆம் மனுதாரர் மகன்கள் என்பதும், 3, 4, 6, 8 மனுதாரர்கள் மகள்கள் என்பதும் தெரியவருகிறது.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:32:27 +0530

***8 ஆம் மனுதாரர் மைனர் மணிஸ்தா , 2 ஆம் மனுதாரர் கண்ணன், 7 ஆம் மனுதாரர் அனிதா இறந்துவிட்டதாக இறப்பு சான்று தாக்கல் செய்யப்பட்டு, அசல் மனுவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே 2, 7, 8*** மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையில் 1, 3, 4, 5, 6 மனுதாரர்களுக்கு மாசிலாமணி என்பவரின் இறப்பிற்கான இழப்பீடாக மொத்தம் **ரூ.8,95,240/- (ரூபாய்.எட்டு லட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்)** கிடைக்கதக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

| **மனுதாரர்கள்** | **இறந்த நபரின் உறவு முறை** | **இழப்பீட்டுத் தொகை** |
|---|---|---|
| 1-ம் மனுதாரர் | மனைவி 50 % | ரூ.4,47,620.00 |
| 3-ம் மனுதாரர் | மகள் 12% | ரூ.1,07,429.00 |
| 4-ம் மனுதாரர் | மகள் 12% | ரூ.1,07,429.00 |
| 5-ம் மனுதாரர் | மகன் 14% | ரூ.1,25,333.00 |
| 6-ம் மனுதாரர் | மகள் 12% | ரூ.1,07,429.00 |
| | **மொத்தம்** | **ரூ.8,95,240.00** |

**17. பிரச்சனை எண்.4 :-**

மனுவின் செலவுத்தொகை மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும், வேறு பரிகாரம் எதுவும் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் பிரச்சனை எண்.4 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**18**. i) முடிவில், இம்மனு பகுதியாக மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீட்டு தொகையாக **ரூ.8,95,240/- யை (ரூபாய்.எட்டு லட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்)** 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் கொடுக்க வேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகையில் 1-ம் மனுதாரருக்கு ரூ.4,47,620/-மும், 3, 4, 6 மனுதாரர்களுக்கு தலா ரூ.1,07,429/-ம், 5 ஆம் மனுதாரருக்கு ரூ.1,25,333/-ம், கிடைக்கத்தக்கது என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் மனுதாரர்களுக்கு கொடுக்கவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:32:34 +0530

ii) மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் செலுத்திவிட்டு பின்னர் வாகன உரிமையாளரான முதல் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதால் அவரது வாரிசான 3 ஆம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. **(Pay and Recovery is ordered).**

iii) மேற்படி இழப்பீட்டு தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை மனுதாரர்களின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் காலம் தவிர 7.5 % சதவிகிதம் ஆண்டு வட்டி சேர்த்து இந்த உத்தரவு தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

iv) மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் மயிலாடுதுறை பாரத மாநில வங்கி கிளையில் உள்ள இந்த மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய கணக்கு எண்.42800964666–ல் செலுத்த வேண்டும் மென்றும், செலத்திய விபரத்தை இந்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

v) பாக்கி நீதிமன்றக் கட்டணம் ரூ.7950/–யை மனுதாரர்கள் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

வழக்குரைஞர் கட்டணம் ரூ.27,405/– என நிர்ணயம் செய்யப்படுகிறது.

இவ்வுத்திரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:32:41 +0530

மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

**Particulars provided as per the Judgment of Hon'ble Madras High Court in M/S Cholamandalam MS Genl Ins.Co.Ltd., – Vs– Mr.Ayyanar, Tr.C.M.P.No.264 to 2020, dated 11.05.2020 உத்தரவுப்படி தனியாக தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை**

**மனு எண்.241/2018**

| | | |
|---|---|---|
| 1. | (Name and Address of the Claimant)<br>(மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்) | 1. தனலெட்சுமி (வயது 53),<br>க.பெ.(லேட்) மாசிலாமணி,<br>நெ.332 தெற்கு தெரு, புத்தமங்கலம் கிராமம்,<br>கிழாய் அஞ்சல், மயிலாடுதுறை தாலுக்கா,<br><br>2. **கண்ணன், வயது 38, (இறந்துவிட்டார்),**<br>த.பெ.(லேட்) மாசிலாமணி,<br>நெ.332 தெற்கு தெரு, புத்தமங்கலம் கிராமம்,<br>கிழாய் அஞ்சல், மயிலாடுதுறை தாலுக்கா,<br><br>3. ரேவதி (வயது 33), க.பெ.செல்வம்,<br>115 ஏ, தோட்டமானிய தெரு,<br>புளிச்சக்காடு அஞ்சல் & கிராமம்,<br>சீர்காழி தாலுக்கா,<br><br>4. ரீட்டா (வயது 29), க.பெ.கண்ணப்பன்,<br>நெ.19/1, சத்திரம், வருஷபத்து கிராமம்,<br>வடகால் அஞ்சல், சீர்காழி தாலுக்கா,<br><br>5. மணிகண்டநாயகன் (வயது 28),<br>த.பெ.(லேட்) மாசிலாமணி,<br>நெ.332 தெற்கு தெரு, புத்தமங்கலம் கிராமம்,<br>கிழாய் அஞ்சல், மயிலாடுதுறை தாலுக்கா,<br><br>6. ரேணுகா (வயது 25),<br>க.பெ.ஞானபிரகாசம்,<br>நெ.332 தெற்கு தெரு, புத்தமங்கலம் கிராமம்,<br>கிழாய் அஞ்சல், மயிலாடுதுறை தாலுக்கா,<br><br>7. **அனிதா (இறந்துவிட்டார்),**<br>க.பெ.(லேட்) மாசிலாமணி<br>நெ.332 தெற்கு தெரு, புத்தமங்கலம் கிராமம்,<br>கிழாய் அஞ்சல், மயிலாடுதுறை தாலுக்கா,<br><br>8. **மைனர் மனிஸ்தா (இறந்துவிட்டார்)**<br>த.பெ.(லேட்) மாசிலாமணி,<br>நெ.332 தெற்கு தெரு, புத்தமங்கலம் கிராமம்,<br>கிழாய் அஞ்சல், மயிலாடுதுறை தாலுக்கா,<br>**(அவரின் தாயார் மற்றும் பாதுகாவலர் 7 ஆம் மனுதாரர் மூலமாக)** |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:32:48 +0530

| | | |
|---|---|---|
| | | ***(Amended as per I.A.No.3/2021, dt.22.03.2021 தேதியிட்ட உத்தரவுப்படி 8 ஆம் மனுதாரர் மைனர் மணிஸ்தா இறந்துவிட்டதாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது)***<br>***(Amended as per I.A.No.6/2025, dt.07.02.2025 தேதியிட்ட உத்தரவுப்படி 2 ஆம் மனுதாரர் கண்ணன், 7 ஆம் மனுதாரர் அனிதா இறந்துவிட்டதாக திருத்தம் செய்யப் பட்டுள்ளது)*** |
| 2. | Name and Address of the Respondents (எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்) | 1. துரைராஜ் **(இறந்துவிட்டார்)**, வயது 40,<br>த.பெ. அந்தோணிசாமி,<br>பிள்ளாவடந்தை கிராமம் காலனி தெரு,<br>மேமாத்தூர் அஞ்சல்,<br>நாகப்பட்டினம் தாலுக்கா & டவுன்,<br>***(Amended as per I.A.No.3/2021, dt.22.03.2021 தேதியிட்ட உத்தரவுப்படி 1 ஆம் எதிர்மனுதாரர் துரைராஜ் இறந்துவிட்டதாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது)***<br>2. கிளை மேலாளர்,<br>ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி, லிட்.,<br>ஸ்டேட் பேங்க் ரோடு,<br>நெ.30/6E, தீன்பிளாசா முதல் தளம்,<br>மயிலாடுதுறை தாலுக்கா மற்றும் டவுன்,<br>3. எலின்ராஜ், வயது 40, த.பெ.துரைராஜ்,<br>பிள்ளாவடந்தை கிராமம், மாதா கோயில் தெரு,<br>மேமாத்தூர் அஞ்சல்,<br>தரங்கம்பாடி தாலுக்கா.<br>***(Amended as per I.A.No.5/2024, dt.19.12.2024 தேதியிட்ட உத்தரவுப்படி 1 ஆம் எதிர்மனுதாரர் துரைராஜ் என்பவர் இறந்துவிட்டதால் அவரது மகன் எலின்ராஜ் என்பவரை 3 ஆம் எதிர்மனுதாரராக சேர்த்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது)*** |
| 3. | Date of Filing of the Claim Petition (மனுதாக்கல் செய்யப்பட்டநாள்) | 22.11.2018 & 04.12.2018 |
| 4. | Date of Award (உத்தரவு பகரப்பட்ட நாள்) | 26.03.2026 |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:32:56 +0530

| | | |
|---|---|---|
| 5. | Amount of Award (வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை) | **ரூ.8,95,240/- (ரூபாய்.எட்டு லட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்)** |
| 6. | Interest Rate Applicable | 7.5% |
| 7. | Date from which interest is payable (எந்த நாளிலிருந்து வட்டி வழங்கப்படவேண்டும்) | மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை (மனுதாரரின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்ட காலத்தை தவிர்த்து) வட்டி வழங்க உத்தரவிடப்படுகிறது Dismissed for default period நீங்கலாக) |
| 8. | Costs if any | எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலவுத் தொகையான ரூ.**36,181.90** முழுமையாக்கப் பட்ட தொகை **ரூ.36,182/-யை** கொடுக்க வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.<br><br>எதிர்மனுதாரருக்கு இம்மனுவில் ஏற்பட்ட செலவுத் தொகை **ரூ.12,210/-யை** அவரே ஏற்கவேண்டும்.<br><br>***(Stamp Duty of Rs.8324.90- Rs.375/- = Rs..7949.90 @ Rs.7950/-The Petitioner shall pay the balance Court Fee of Rs.7,950/- within 10 days.*** |

**Particulars of costs**

| | **For Petitioner** | **For Respondent** |
|---|---|---|
| | **Rs.** | **Rs.** |
| Court fee Rs.8324.90 - 375/- = Rs.7949.90 @ Rs.7950/- | 8324.90 | |
| Stamp in Vakalath | 10.00 | 10.00 |
| Fee for services of process | 112.00 | |
| Stamp on Exhibits | 130.00 | |
| Typing charge | 200.00 | 200.00 |
| Advocate fee | 27,405.00 | 12,000.00 |
| **Total** | **36,181.90** | **12,210.00** |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:33:03 +0530

| | | |
|---|---|---|
| 9. | The Mode and manner of deposit of Compensation (இழப்பீட்டுத் தொகையை வைப்பீடு செய்யப்படும் வழிமுறை) | <u>**முடிவாக, இம்மனு கீழ்கண்டவாறு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப் படுகிறது.**</u><br><br>i) மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீட்டு தொகையாக **ரூ.8,95,240/-** த்தை **(ரூபாய்.எட்டு லட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்)** 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் கொடுக்க வேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகையில் 1-ம் மனுதாரருக்கு ரூ.4,47,620/-மும், 3, 4, 6 மனுதாரர்களுக்கு தலா ரூ.1,07,429/-ம், 5 ஆம் மனுதாரருக்கு ரூ.1,25,333/-ம், கிடைக்கத்தக்கது என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் மனுதாரர்களுக்கு கொடுக்கவேண்டும் என்றும் உத்தரவிடப் படுகிறது.<br><br>ii) மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் செலுத்திவிட்டு பின்னர் வாகன உரிமையாளரான முதல் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதால் அவரது வாரிசான 3 ஆம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. **(Pay and Recovery is ordered).**<br><br>iii) மேற்படி இழப்பீட்டு தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை மனுதாரர்களின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் காலம் தவிர 7.5 % சதவிகிதம் ஆண்டு வட்டி சேர்த்து இந்த உத்தரவு தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>iv) மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் மயிலாடுதுறை பாரத மாநில வங்கி கிளையில் உள்ள இந்த மோட்டார் வாகன விபத்து |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:33:12 +0530

| | | |
|---|---|---|
| | | கோரிக்கை தீர்ப்பாய கணக்கு எண்.42800964666–ல் செலுத்த வேண்டும் மென்றும், செலத்திய விபரத்தை இந்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>v) பாக்கி நீதிமன்றக் கட்டணம் ரூ.7950/–யை மனுதாரர்கள் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்ளுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.<br><br>வழக்குரைஞர் கட்டணம் ரூ.27,405/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. |
| 10. | The Mode and manner of Disbursement<br>(மேற்படி இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் வழிமுறை) | Through *NEFT / RTGS* |
| 11. | Date of payable Balance Court Fee<br>(பாக்கி நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டிய நாள்) | பாக்கி நீதிமன்றக் கட்டணத்தை மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது. |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:33:20 +0530

மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

**1. <u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :–</u>**

ம.சா.1 – திருமதி. தனலெட்சுமி (மனுதாரர்)

ம.சா.2 – திரு. மாரியப்பன்

ம.சா.3 – திரு. ஆனந்தன்

ம.சா.4 – திரு.ே◌ஹமச்சந்திரன்

**2. <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> :–**

ம.சா.ஆ.1 19.08.2018 முதல் தகவல் அறிக்கை நகல்

ம.சா.ஆ.2 25.08.2018 சடலக்கூராய்வு அறிக்கை நகல்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:33:26 +0530

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.3 | 10.09.2018 | இறப்பு சான்று நகல் |
| ம.சா.ஆ.4 | --- | விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு சான்று நகல் |
| ம.சா.ஆ.5 | 31.05.2018 | காப்பீட்டு சான்று நகல் |
| ம.சா.ஆ.6 | 18.11.2020 | வாரிசு சான்று விண்ணப்ப மனு கணினி நகல் |
| ம.சா.ஆ.7 | 10.08.2019 | 8 ஆம் மனுதாரர் மனிஸ்தாவின் இறப்பு சான்று நகல் |
| ம.சா.ஆ.8 | --- | மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டை நகல்கள் மற்றும் வங்கி கணக்கு புத்தகங்களின் நகல்கள் |

**3. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :-**

எ.ம.சா.1 சின்னத்தாயம்மாள் - வட்டார போக்குவரத்து அலுவலக இளநிலை உதவியாளர்

**4. சாட்சிய சான்றாவணங்கள் :-**

சா.சா.ஆ.1 இறந்த மாசிலாமணி ஓய்வுதியம் பெற்றதற்கான ஆவணங்கள்

சா.சா.ஆ.1(a) 20.02.2023 வட்டார போக்குவரத்துக் கழக கடிதம்

சா.சா.ஆ.2 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல்

**5. எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :- இல்லை.**

SUDHA P Digitally signed by SUDHA P
Date: 2026.03.26 19:33:35 +0530

மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

Draft/ Fair Order
MCop.No.241/2018
26.03.2026.